மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 75.

திரு. கரு. சீமைச்சாமி : இராமநாதபுரம் என்று சொல்லப் பட்டிருப்பதால் நான் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லா மாவட்டங்களிலிருந்தும் தான் உறுப்பினர்கள் வந்திருக்கிறார்கள். ஒவ்வொருவரும் தனித் தனியாகக் கேள்விகள் கேட்பது என்றால் அதற்கு நேரம் வேண்டு மல்லவா?

திரு. கரு. சீமைச்சாமி : சுதந்திராக் கட்சிக்கும் வாய்ப்பு கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பார்ட்டி கணக்குப் பார்க்க முடியாது. உங்கள் பார்ட்டிக்கும் போதிய அளவிற்குத் துணைக் கேள்விகளுக்கு இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

குற்ற இயல் வழக்குகள் தாசில்தார் பயிற்சி யாளர்களுக்கு மாற்றும் முறை.

*75 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடை யளிப்பாரா—

குற்ற இயல் நீதி மன்றத்திலிருந்து சில வழக்குகளைத் தாசில் தார்கள் பயிற்சி பெறுவதற்காக, மாற்றுகிற முறையைத் திருத்தும் உத்தேசம் ஏதேனும் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : ஆம்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : சட்டம் படிக்காதவர்களும், சட்டத் துறையில் அனுபவம் பெறாதவர்களும் வழக்குகளை நடத்தி சாட்சிகளை விசாரித்துத் தீர்ப்புகள் வழங்கும்போது ஆங்காங்குள்ள நீதிபதிகளைக் கலந்தாலோசித்துத்தான் தீர்ப்பு வழங்குகிறார்கள். ஆகவே இது ஒருமனத் தீர்ப்பாகாது. இருமனத் தீர்ப்பாகும். அதனால் நீதியின் புனிதத் தன்மை கெடுகிறது என்பதை அரசு அறிகிறதா ? ஆகவே, இது சம்பந்தமாக உடனடியாக நடவடிக் கைகள் எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : டெப்டி தாசில்தார் களுக்கு மாஜிஸ்ட்ரேட் ட்ரெயினிங் கொடுப்பதற்காக அவர்களிடம் சில வழக்குகளைக் கொடுப்பது என்பது நீதி விசாரணையில் அதற்கு வேண்டிய ஆற்றல், அதற்கான சட்ட நுணுக்கங்கள் இவற்றில் அவர்களுக்கு ஞானம் குறைவாக இருக்கிறது என்பது ஒன்று. இரண்டாவதாக, டெப்டி தாசில்தார்கள் ஆங்காங்குள்ள செல்வாக் கிற்குக் கட்டுப்பட்டு விடுவார்களோ என்ற காரணத்தினால் இது சம்பந்தமாக வருவாய்த்துறை வாரியத்தையும் உயர்நீதி மன்றத் தையும் கலந்தாலோசித்து இந்த முறை தேவையில்லை என்று கைவிடப்படுகிறது. ஆனால், டெப்டி தாசில்தார்களுக்கு மஜிஸ்டீரியல் ட்ரெயினிங் தேவைப்படுகிறது. வேறு சில

ட்ரெயினிங்களும் தேவைப்படுகின்றன. போலீஸ் பயிற்சி தேவை என்று ரெவின்யூ ஸ்பெஷல் நூல்களில் இருக்கிறது. அதற்காக ஆறு வார காலம் ஒவ்வொரு டெப்டி தாசில்தாரும் போலீஸ் ட்ரெயினிங் பெறவேண்டுமென்று இருக்கிறது. இதுமாதிரியான முறையில் இப்படி ஒரு நீதிபதியின்கீழ் டெப்டி தாசில்தார் நேராகச் சுதந்திரமாக வழக்குகளை விசாரிக்காமல் மூன்று, ஆறு மாத காலப் பயிற்சி பெறலாம் என்ற ஒரு திட்டம்பற்றி அரசாங்கம் ஆலோசித்து வருகிறது. அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

THIRU R. PONNAPPA NADAR: Sir, may I know from the Hon. Minister whether the Government would take steps to avoid inordinate delay in the disposal of cases which are trasnsferred to the Special Magistrate trainees? மு.ப. 10-00

THE HON. THIRU K. A. MATHIALAGAN: The hon. Member should put the question to the Minister for Law.

திரு. அ. லெ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, இன்று தாசில்தார்கள் எல்லாம் நிர்வாகத்துறை அதிகாரிகளாக இருக்கின்றார்கள். இன்றைக்கு அரசியலமைப்புச் சட்டப்படி, நீதித் துறையை நிர்வாகத்திலே ஒன்றுபடச் செய்வது "separation of the judiciary from the executive" என்ற கொள்கைக்கு மாறுபட்டது அல்லவா?

(பதில் இல்லை)

THIRU B. VENKATASWAMY: Sir, is there any target fixed with regard to the number of cases to be handled by the Deputy Tahsildars to get their promotion as Tahsildars?

(No reply).

திரு. கே. விநாயகம்: சார், செக்ஷன் 145-ன் கீழ் வருவதை ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர்கள் பரிசீலித்துப் பார்த்த பிறகு, அதில் இருக்கிறது என்று தெரிந்த பிறகு, போலீஸ் ரிப்போர்ட்டை வாங்கிக்கொண்ட பிறகு, மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கு அனுப்புகிறார்கள். அதை மாற்றி நேரடியாகவே மாஜிஸ்ட்ரேட்டுகளுக்குப் போகலாம் என்று செய்யலாமே? ஏனென்றால் ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர்கள், அவர்கள் வேறு நேரம் எடுத்துக் கொள்வதால் பல நாட்கள் ஆகிறது 'Justice delayed is justice denied'. என்பதால் அந்த விதிகளையெல்லாம் மாற்றியமைக்கும் எண்ணம் அரசாங்கத்தின் குறிப்பில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU K. A. MATHIALAGAN: 'Justice delayed is justice denied'. என்று சொல்லும்பொழுது அதேமாதிரியாக அவசரத்திலே அநீதிகளும் அக்கிரமங்களும் நடந்து விடவும் விடக்கூடாது.

[1969 பிப்ரவரி 26

கிராம அதிகாரிகள்

***76 வினா.—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு நிதி அமைச்சர், தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா ?

கிராம முன்சீப், கர்ணம் ஆகியோரை அரசாங்க உத்தியோகஸ்தர்களாக அங்கீகரிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கிராம அதிகாரிகள், கர்ணம் ஆகியவர்கள் சம்பந்தமாக, அவர்களுடைய நிலைகள், அவர்களுடைய அந்தஸ்து, உத்தியோகம் இவை சம்பந்தமாக உயர்வு சம்பந்தமாக விவரங்கள் அரசாங்கத்தின் ஆய்விலே இருக்கிறது.

திரு. பி. எஸ். மணியன் : தலைவரவர்களே, கிராம முன்சீப் கர்ணம் போன்ற அதிகாரிகள் வேலையை ஒப்புக்கொண்டது முதல் கடைசிவரைக்கும் ஒரே ஊரிலேயே இருப்பதால் அவர்கள் மூலமாகப் பல விவகாரங்கள் ஏற்படுவதாகப் பொதுமக்கள் மத்தியிலே நீண்ட காலமாக ஒரு கருத்து இருப்பதால் அவர்களையும் மாற்ற, அரசாங்க உத்தியோகஸ்தர்களைக் குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு வெவ்வேறு இடங்களுக்கு மாற்றுவதைப் போல, அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இது பொதுவாக ஒரு பெரிய பிரச்சனையின் அடிப்படை அம்சங்களிலே வரக்கூடிய காரியங்களில் ஒன்று. அவர்களை முதலிலே அரசாங்க உத்தியோகஸ்தர்களாக எடுத்துக்கொள்ள வேண்டுமா என்பது ஒரு அடிப்படைப் பிரச்சனை. இன்றிருக்கிற அமைப்பிலே என்னென்ன காரியங்களைச் செய்யலாம் என்பதைப்பற்றி 10, 15 வருஷங்களாக யோசித்துக்கொண்டு வரப்படுகிறது. அவர்களை மாற்றுவது என்பது அவர்கள் அரசாங்க உத்தியோகஸ்தர்களாக ஆகிவிட்டார்கள் என்ற நிலையிலேதான் மாற்ற முடியும். அதிலும் பல சிக்கல்களும், சந்தேகங்களும் இருப்பதால் அதைப்பற்றிய தெளிவான முடிவு இப்பொழுது எடுக்க முடியாது.

திரு. ரா. ராமச்சந்திர துரை : தலைவரவர்களே, கொலை செய்துவிட்டுச் சிறையில் தண்டனை பெற்ற குற்றவாளிகளுக்குக் கிராம முன்சீப் பதவி கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படிக் கொடுக்கலாமா ? கொடுப்பது தவறு என்றால் அந்த வேலையைக் கொடுப்பதற்கு மூலகாரணமாக இருந்தவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அது சம்பந்தமான விவரங்களை மாண்புமிகு உறுப்பினரவர்களே தெளிவாகவும், விவரமாகவும் முதலமைச்சரவர்களுக்கோ அல்லது என்னிடத்திலோ அல்லது இந்தச் சபையிலோ கொண்டுவந்தால் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதையும், அதற்கு அவசியம் இருக்கிறதா என்பதையும் பரிசீலனை செய்யலாம்.